வினா எண் 465, திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 466, திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக டாக்டர் க. கோபால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

466—

நரிமணம் மின்நிலையத்தில் மின்சாரம் தயாரிக்கும் இரு பிரிவுகளை மீண்டும் இயக்குதல்

** 14705—திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்வாரியத்தின் நரிமணம் மின்நிலையத்தில் மின்சாரம் தயாரிக்கும் இரண்டு பிரிவுகளும் செயல்படாமல் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த மின் திட்டம் எப்பொழுது முதல் மீண்டும் இயங்கத் துவங்கும்?

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரிமணத்தில் 5 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு எரிவாயு சுழலி மின்னாக்கிகள் நிறுவப்பட்டன. ஆனால், மின்னாக்கிகளிலிருந்த குறைபாட்டினால் இரண்டு மின்னாக்கிகளும் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் செயல்படாமல் போயின. அவைகளை நிறுவிய ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனம் தங்கள் சொந்தச் செலவிலேயே பழுதுபார்த்து முதல் மின்னாக்கியை 13.8.92 முதலும், இரண்டாவது மின்னாக்கியை 7.9.92 முதலும் இயக்கி வைத்தது. இந்த மின்னாக்கிகளைப் பழுதுபார்ப்பதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் செலவு ஏதும் செய்யவில்லை.

(ஆ) இந்த இரண்டு எரிவாயு சுழலி மின்னாக்கிகளும் இப்போது தொடர்ச்சியாகச் செயல்பட்டு வருகின்றன.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் என்னுடைய தொகுதியான நன்னிலத்தில் நரிமணத்தில் கிடைக்கக்கூடிய அந்த இயற்கை எரிவாயுவைக் கொண்டு 5 மெகாவாட்

1994 மே 2]

என்கின்ற அளவிலே மின்சார உற்பத்தி செய்யப்படுகிறது. தற்போது கமலாபுரம் மற்றும் குத்தாலம் போன்ற பகுதிகளில் எல்லாம் அதிகமான இயற்கை எரிவாயு எரிந்துகொண்டு இருக்கின்ற சூழ்நிலையில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் உற்பத்தியைக் கூடுதலாக்கும் எண்ணத்துடன் இன்னும் அதிகமாக மின்சார உற்பத்தியைப் பெருக்குகின்ற ஒரு வாய்ப்பு இருப்பதால், மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்கின்ற அளவுக்கு அங்கே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நரிமணத்திலே எரிவாயுவைப் பயன்படுத்தி இரண்டு மின்னாக்கிகள் 5 மெகாவாட் அளவிலே உற்பத்தி செய்யப்பட்டு அது செயலிலே இருந்துவருகிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே இப்பொழுது பிள்ளைபெருமாள்நல்லூரிலே 300 மெகாவாட் திறன் கொண்ட, இதைப்போன்ற ஒரு மின்னாக்கி எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தைத் துவக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த மின்னாக்கிகளைச் செயல்படுத்துவதற்கான எரிவாயுவை அந்தப் பகுதியிலே பயன்படுத்தி வருகிறோம். ஆகவே, எதிர்காலத்திலே புதிய மின்நிலையங்கள் வருகின்றபொழுது உபரியாக இருக்கின்ற எரிவாயுவைப் பயன்படுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிதான் இப்படிப்பட்ட அனுமதிகளை வழங்கியிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இதுசம்பந்தமாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 467, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

467—

தருமபுரியில் சோயா பீன்ஸ் பயிரிடுவதை விரிவுபடுத்துதல்

* ***24694***—*திரு. கா.பூ. முனுசாமி:*

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—